அடுத்த வாரத்தில்
இருந்து விலை
ரூபா 20.00ஐ
செலுத்தி மலைமுரசை
வாங்கி வாசியுங்கள்

ஆவணி மாதம் 03ம் திகதி August 19, 2012

# மலைமுரசு®

MALAIMURASU

அறைவு 01 இயம் 04

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

விலை – 20.00 பிரதி ஞாயிறு தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் வார இதழ் இப்பிரதி இலவசம்

## நீள்கிறது மின்வெட்டு
## இருளில் மூழ்கும் இலங்கையின் எதிர்காலம்

மின்வெட்டு இனிவரும் காலங்களில் நாளுக்கு மூன்று மணித்தியாலங்களாக உயர்த்தப்படவிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இவ்வாண்டுக்கான இலங்கையில் மழை வீழ்ச்சி பொய்த்துப் போயுள்ள நிலையில் மின்வெட்டை நீட்டிக்க வேண்டிய சூழலுக்கு மின்சபை தள்ளப்பட்டுள்ளதாக காரணம் விளம்பும் நேரத்தில் மேலும் இரு முக்கிய காரணிகளாலேயே இம்மின்வெட்டு கடுமையாகும் எனத் தெரிகின்றது.

மின் பிறப்பாக்கிகளுக்கான டீசல் எரிபொருளின் வருகை தாமதமாகியுள்ளமையும், மின் ஊழியர்களின் நாடு தழுவிய வேலைநிறுத்தமுமே அவையாகும்.

கொழும்புத் துறைமுகத்தில் கட்டப்பட்டுள்ள வைட்டல் குழுமத்திற்குச் சொந்தமான கப்பலில் 20,000 தொன் மின் பிறப்பாக்கிகளுக்கான டீசல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனை பாவனைக்குட்படுத்துவதற்கான "தொழில்நுட்ப அனுமதி" இன்னமும் பெற்றுக்கொள்ளப்படவில்லை என்பதால் எரிபொருளை மின் பிறப்பாக்கிகளுக்கு வழங்க முடியாதநிலை எழுந்துள்ளது. மின் ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக தொழில் தடைகள் எழுத்துள்ளன. நுரைச்சோலை அனல் மின்னிலையத்திலிருந்து மின்னைக் கொண்டு வரும் பிரதான வடங்களில் ஏற்பட்டுள்ள தடையைச் சீர்செய்வதில் இவ் வேலைநிறுத்தப் போராட்டம் காலதாமதத்தை ஏற்படுத்தியுள்ளது.

(8ம் பக்கம்)

## வெளித்தேச வலுவிற்கு வளையும் இலங்கை அரசு
## நவிப்பிள்ளையின் குழுவின் வருகையும் தென்னாபிரிக்க மத்தியஸ்தமும்

இறுக்கமான தனது நிலையிலிருந்து இலங்கை அரசு மெதுவாக வளைந்து கொடுக்கும் முயற்சியில் இறங்கியிருப்பதை கடந்த வாரங்களில் நிகழ்ந்த இரு விடயங்கள் வெளிக்காட்டியிருக்கின்றன.

முதலாவதாக ஐக்கிய நாடுகள் சபயின் மனிதவுரிமை ஆணையாளரான நவநீதம்பிள்ளை அவர்களின் குழு இலங்கையின் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்தும் திட்டத்திற்கு ஆலோசனை வழங்குவதற்காக இலங்கைக்குள் வர அனுமதியளிக்கப்பட்டுள்ளதை நோக்கலாம்.

ஐ.நா மனித உரிமைச் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் வெற்றியடைந்ததைத் தொடர்ந்து பரிந்துரைகளை செயல்படுத்தும்படி இலங்கை மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்படத் தொடங்கிய காலம் தொட்டு உணர்ச்சி பூர்வமான வார்த்தைகளால் அரசமட்டத்தைச் சேர்ந்த பலர்" ஐ.நா

(8ம் பக்கம்)

### திருக்கோணமலை மாவட்டத்திலிருந்து 2,45,363 பேர் வாக்களிக்கத் தகுதி

(8ம் பக்கம்)

எதிர்வரும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் திருக்கோணமலை மாவட்டத்திலிருந்து இரண்டு இலட்சத்து நாற்பத்தைந்தாயிரத்து முன்னூற்றுபதின் மூன்று வாக்காளர்கள் 285 வாக்களிப்பு நிலையங்கள் மூலம் வாக்களிக்க உள்ளனர். மூதூரில் 89,370 பேரும், திருக்கோணமலையில் 85,852 பேரும், சேருவிலவில் 70,141 பேரும் வாக்களிக்க உள்ளனர்.

### 200 பேருக்கு அடையாள அட்டை இல்லை

(8ம் பக்கம்)

திருக்கோணமலை மாவட்டத்தின் வடக்கு எல்லைப்புறத்தில் உள்ள தென்னமரவாடித் தமிழ்க் கிராமத்தில் தற்போது மீளக்குடியமர்ந்துள்ள மக்களில் சுமார் 200 பேருக்கு தேசிய அடையாள அட்டை இல்லாதது பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் வார இறுதியில் அக்கிராமத்திற்குச் சென்று நடத்திய தேர்தல் விழிப்புணர்வு நடவடிக்கையின் போது கண்டுபிடிக்கப்பட்டது. கிழக்கு மாகாணசபைத் தேர்தல் திருக்கோணமலை மாவட்டத்திலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களில் ஒருவராகப் போட்டியிடும்

### புதிய உறுப்பினராக வேலாயுதம் மோகன் நியமனம்

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மூதூர் பிரதேச சபையின் எதிர்க்கட்சியாக தமிழ்தேசியக் கூட்டமைப்பு தெரிவாகி இருந்தது. அக்கட்சியின் எதிர்கட்சித் தலைவராக க.திருட்செல்வம் செயற்பட்டு வந்தார். அவர் தன் சுயவிருப்பின் பெயரில் இராஜினாமா செய்ததை அடுத்து விருப்பு வாக்கு அடிப்படையில் அவ்விடத்திற்கு தேர்தலில் போட்டியிட்ட கிளிவெட்டி கங்குவேலியை பிறப்பிடமாகக் கொண்ட வேலாயுதம் மோகன் நியமிக்கப்பட்டுள்ளார்.

(8ம் பக்கம்)

### பஸார் தபாலகம் இருக்குமிடம் தெரியாது

திருக்கோணமலை நகரின் பிரதான வீதியில் இயங்கும் பஸார் தபால் அலுவலகம் எங்கு அமைந்துள்ளது என்பது தெரியாததால் பொது மக்கள் தபால் அலுவலகம் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து தங்கள் கருமங்களை செய்வதற்கு கஷ்டப்படுவதாக பிரதம தபால் அலுவலகத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(8ம் பக்கம்)

NEW ADMISSION FOR ACADEMIC YEAR 2012-2013

JULY - SEPTEMBER 2012

NEW ADMISSION WILL BE ISSUED FOR
➡ PLAY GROUP
➡ LKG ➡ UKG ➡ STEP 1 ➡ GRADE 01 - 08

OUR PAST ACTIVITIES



GREENWICH INTERNATIONAL SCHOOL
#23, GREEN ROAD, TRINCOMALEE. T.P-026 2226818, 077 4123672 E-MAIL :- GISTRINCOMALEE@GMAIL.COM
GREENWICH EDUCATION ACADEMY (PVT) LTD. (REG NO-PV 76073)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு

159A, 2ம் மாடி, கடல் முக வீதி,
திருகோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

## வணக்கம் !

ஈழத்தமிழர் பிரச்சனைத் தீர்வுக்கு காலம் கனிந்து வருவதுபோல் தோன்றுகின்றது அல்லவா? நவநீதம்பிள்ளை அவர்களின் குழுவும், தென்னாபிரிக்க மத்தியஸ்தமும் எமக்கு ஓர் நம்பிக்கைக் கீற்றை வானில் தோற்றுவித்திருக்கின்றது. அந்தக் கீற்றை அழியா நட்சத்திரமாய் மாற்றும் பிரம்மாக்களாய் மக்கள் நம்பிக்கொண்டிருப்பது யாரை? எமது தழிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தான்.

எங்கள் எல்லோருக்காகவும் அவர்கள் இப்போதே அனைத்து நடவடிக்கைகளுக்கும் தயாராகி விடவேண்டும் என்பதே எமது வேண்டுகோள். கடைசி நிமிடம் வரை திட்டமிடல்கள் எவையுமின்றி தென்னாபிரிக்க மத்தியஸ்தர்களுடன் தான் தோன்றித் தனமான பேச்சுக்களை முன்வைப்பதை தவிர்பதற்காய் இன்றிலிருந்தே அவர்கள் தயாராகி விடுவார்கள் என எல்லாத் தமிழரையும் போலவே நாமும் நம்புகின்றோம். அந் நம்பிக்கை அவமாய்ப் போய்விடுகின்றதா? என்பதைக் காலம் எமக்குச் சொல்லும்.

இலங்கையின் கல்வி நிலைமை படுமோசமான ஓர் நிலைக்குச் செல்கின்றது போலத் தெரிகின்றது. பல்கலைக் கழகங்கள் பூட்டப்பட்டுக் கிடக்கின்றன. உயர்தரப் பரீட்சை வினாத் தாள்களிற் குளறுபடிகள் மலிந்து கிடக்கின்றன. உயர்தரப் பரீட்சை அனுமதி அட்டைகள் ஆண் பரீட்சகருக்கு பெண் பரீட்சகரினது அனுப்பப்பட்டிருக்கின்றன. கணித பாடத்திற்கு விண்ணப்பித்த மாணவிக்கு விஞ்ஞான பாடத்திற்கு அனுமதி அட்டை கிடைக்கப் பெற்றுள்ளது. எப்போதுமில்லாத அளவிற்கு உயர்ந்துள்ள குளறுபடிகளுக்குள் எமது செல்லக் குழந்தைகள் மனமுடைந்து போய்விடாமலிருக்க வேண்டும். கல்வி மீது அவநம்பிக்கை கொள்ளாதிருக்க வேண்டும். எம்மைவிட்டகலாக் கல்விச் செல்வத்தை குழந்தைகளுக்குப் புகட்டும் பொறுப்பை பெற்றோரும், பேரன்பு மிக்க ஆசிரியக் குழாமும் இடைவிடாது நிகழ்த்த வேண்டும் என்பதே மலைமுரசின் வேண்டுகோள்.

-ஆசிரியர்-

### மலைமுரசுக்கு நிருபர்கள் தேவை

மலைமுரசு பத்திரிகைக்கு பிரதேச பத்திரிகை நிருபர்கள் தேவை. கொடுப்பனவுகள் வழங்கப்படும் விருப்புடையவர்கள் உங்கள் சுய விபரக் கோவையை கீழ்காணும் மின்னஞ்சல் முகவரிக்கோ, தபால் முகவரிக்கோ அனுப்பி வைக்கவும்.



தொடர்ந்து பதினெட்டு நாட்கள் நடைபெற்று வரும் வில்லூன்றிக் கந்தனின் மகோற்சவ தேரோட்டம் கடந்த வியாழக்கிழமை (16.08.2012) அன்று நடைபெற்ற போது இறைவன் தேரில் ஆரோகணித்திருப்பதையும் தேரோட்டத்தில் கலந்து கொண்ட அடியார்களையும் படங்களில் காணலாம்.

## கடுமையான வரட்சியினால் மூதூர் மக்கள் பெரும் பாதிப்பு

திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள மூதூர் பிரதேசத்தில் வரட்சியின் காரணமாக கிணறுகளில் நீர் வற்றியுள்ள நிலையில் மூதூர், ஜாயா நகர், இக்பால் வீதி, ஆலிம்நகர், மத்தியவீதி, அம்மன் நகர், பாட்டாளிபுரம், பள்ளிக்குடியிருப்பு போன்ற பகுதிகளில் வசிக்கும் மக்கள் குடிநீருக்காக பெரும் சொல்லொணா கஷ்டப்படுகின்றனர். மிக நீண்ட காலமாக கடுமையான வரட்சியினால் கிணற்று நீர் வற்றிய நிலையில் குடிப்பதற்கும், பாவனைக்குமான நீர் இல்லாதுள்ளதால் மக்கள் ஆறுகள் மற்றும் ஆற்றங்கரை வயல் வாய்க்கால்களை அண்டிய கிணறுகளில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் சென்று நீர் பெற்று வருகின்றனர்.

இதே வேளை மூதூர் தள வைத்தியசாலை காணியில் உள்ள கிணறுகளிலும் நீர் வற்றியுள்ளதால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளர்களுக்கு தேவையான குடிநீரை பெறுவதிலும் பெரும் அவதியுறுவதையும் காணமுடிகின்றது.

## நன்றி தெரிவித்தார் நித்தி மாஸ்டர்



நடைபெற இருக்கின்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் பேரினவாத கட்சிகளிலும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தவிர்ந்த ஏனைய தமிழ்க் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களிலும் போட்டியிடும் தமிழ் வேட்பாளர்கள் தமிழ்த் தேசிய நலன் கருதி தேர்தலை புறக்கணிக்க எடுத்த முடிவுகள் தொடர்பாக தாம் பெருமகிழ்வடைவதாகவும் குறிப்பாக அகில இலங்கை தமிழர் கூட்டணியைச் சேர்ந்த இருவர் இம்முடிவுகளை எடுத்துள்ளதாகவும் அவர்களுக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்வதாகவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட வேட்பாளர் பரமலிங்கம் நித்தியானந்தம் மலைமுரசுக்கு தெரிவித்தார்.

மேலும் சென்றவார மலைமுரசில் இது தொடர்பாக குறிப்பிடப்பட்டமைக்கும் தனது நன்றிகளை தெரிவித்த நித்தி மாஸ்டர் தமிழ் பேசக்கூடிய மக்களின் விடிவு கிழக்கு மாகாண சபைத்தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பை பலப்படுத்துதலால் அன்றி வேறு எதனாலும் கிடைத்துவிடாதென்றும் அடுத்த மாதம் 8ஆம் திகதி நடைபெற இருக்கின்ற தேர்தலில் தமிழ் மக்கள் அனைவரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பின்னால் அணிதிரள வேண்டுமென்றும் வேண்டுமென்றும் மேலும் குறிப்பிட்டார்.

## கள்ள தேசிய அடையாள அட்டைகளை உருவாக்கும் நிலையம் கைப்பற்றப்பட்டது.

தீர்க்கப்படாத குற்றங்களை ஆராயும் காவல்துறையின் மிரிகான பிரிவு கடந்த 10 வருடங்களாகத் தேசிய அடையாள அடடைகளைக் கள்ளமாகத் தயாரித்து "நாட்டுக்குச் சேவை புரிந்த" மருதானையைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்ததுள்ளது. அவர் இச் சேவையை ஒரு மணி நேரத்திற்குள் நிறைவேற்றித் தருவதாகவும் இதற்கு ரூபா 2000 ஐ அறவிடுவதாகவும் காவல்துறையினருக்கே "கொந்தராத்து" பேசியுள்ளார். ஆனாலும் இச்சேவை முகவர்களூடாக ரூபா 25,000 ற்கு விற்கப்பட்டுள்ளது.

## காணிகளிற்காய் வருகை தரும் புதிய உரிமையாளர்கள்

தமது காணி உரிமையைப் பறிப்பதற்கு வெளியில் இருந்து வந்த சிலர் செயற்பட்டு வருவதாக தெரிவித்து, திருக்கொணமலை மாவட்டத்தின் இரண்டு கிராமங்களைச் சேர்ந்த மக்கள் 15.08.2012ல் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருக்கோணமலை அனுராதபுரம் வீதியின் மிகிந்தபுர சந்தியில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. (8ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணாமல் போகிறது "13"

புதிய வாகன இலக்கத் தகடுகளில் 13ம் இலக்கம் இனி சேர்க்கப்பட மாட்டாது என மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் தெரிவித்துள்ளார். பொதுவாகவே 13வது இலக்கம் பேய்களுக்குரிய இலக்கம் என மக்கள் "மூடத்தனமாக" நம்புவதால் இந்நிலை எழுந்துள்ளது. ஏற்கனவே விடுதிகளிலும், ஹொட்டல்களிலும் 13ம் இலக்கம் எந்த அறைகளுக்கும் வழங்கப்படுவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் புதிய தொடர் இலக்கங்கள் இனிப் பதிவுசெய்யப்படும் வாகனங்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் ஆணையாளர் தெரிவித்தார். இதனடிப்படையில் புதிய இலக்கமானது "AAA" எனும் ஆங்கில எழுத்துக்களின் தொடராக ஆரம்பிக்கும்.

மேலும் இனிவரும் புதிய இலக்கத்தகடுகள் களவு போன வாகனங்களைக் கண்டுபிடிக்கக் கூடியதான "இரகசியக் களவுத் தடுப்புத் திட்டத்தைக்" கொண்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

## உலக மனநோய்ச் சுகாதாரத் தினத்ததை முன்னிட்டு நாடுதழுவிய வரைபு, கட்டுரை மற்றும் சுலோகப் போட்டிகள்.

உலக மனநோய்ச் சுகாதார தினம் ஒக்டோபர் மாதம் 10ம் நிகழ்வதை முன்னிட்டு தேசிய மன நோய்ச் சுகாதார நிலையம் நாடு முழுவதற்குமான கட்டுரை, வரைபு சுலோகப் போட்டிகளை நடாத்தவுள்ளது.

இப் போட்டிகளுக்கான தலைப்பாக "மனநலப் பாதிப்பிற்குள்ளான குடும்ப அங்கத்தவர்களை இவ்வாறே நாம் கவனிப்போம் - This is how we should take care of family members with mental illness" அறிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ள போட்டியாளர்கள் அனைவரும் தேசிய அல்லது மாகாணப்பாடசாலைகளின் மாணவர்களாக இருக்க வேண்டும் என்பதுடன் ஆண்டு 5ற்கு மேற்பட்டவர்களாகவும் இருக்க வேண்டும்.
சித்திரங்கள் 14ற்கு 18 அங்குலத் தாளில் வரையப்பட்டிருக்க வேண்டும். கட்டுரைகள் 1000 தொடக்கம் 1200 வார்த்தைகளுக்குள் இருப்பதுடன் ஆக்கபூர்வமான மனநலச் சுகாதார மேம்படுத்தலுக்கான வாசகங்களாக சுலோகப் போட்டி வாசகங்கள் அமைய வேண்டும்.

செம்டெம்பர் 10ம் திகதிக்கு முன் பின்வரும் முகவரிக்கு ஆக்கங்கள் அனுப்பபட வேண்டும்.
Occupational Therapy Unit/ Psychiatric Social Work Unit National Institute of Mental Health - Angoda

## மூதூர் தளவைத்தியசாலை ஊழியர்கள் செவ்வாய்கிழமை அடையாள வேலை நிறுத்தம்

திருக்கோணமலை மூதூர் தளவைத்தியசாலையைச் சேர்ந்த ஊழியர்கள் இன்று செவ்வாக்கிழமை ஒரு மணித்தியாலய அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.நோண்புப் பெருநாள் முற்பணம் மற்றும் மேலதிக நேரக்கொடுப்பனவை உடனடியாக வழங்குமாறு கோரியே இவர்கள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.இன்றையதினம் மாலைக்குள் தமது கோரிக்கை நிறைவேற்றப்படாது விடின், நாளைய தினமும் வேலைநிறுத்தத்தில் ஈடுபடப்போவதாகவும் வைத்தியசாலை ஊழியர் தெரிவித்துள்ளனர்.

இந்த அடையாள வேலை நிறுத்தத்தில் வைத்தியசாலையின் மருத்துவர்கள், துணை மருத்துவசேவை உத்தியோகத்தர், தாதிமார்கள், சிற்றூழியர்கள் ஆகிய தரத்தவர் அனைவரும் கலந்து கொண்டனர். இதேவேளை இந்த அடையாள வேலை நிறுத்தம் காரணமாக சிகிச்சை பெறுவதற்காக வைத்தியசாலைக்கு வந்த நோயாளர்கள் சிரமத்திற்கு உள்ளாகியதைக் காணமுடிந்தது.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன் எழுந்து நிற்கும் தமிழரின் தலைவிதிக் கேள்விகள் .. எது? எவ்வாறு?

ஏற்கனவே மலைமுரசின் முதலாவது பதிப்பினூடாக த.தே.கூ வின் நோக்கு மற்றும் பணிக்கூற்று பற்றிக் கலந்துரையாடிக்கொண்டிருந்தோம். அதன் குறிக்கோள்கள் பற்றி இன்று கதைப்போமே.
ஏற்கனவே அக்கட்டுரையில் எழுதியது போல் த.தே.கூ வின் குறிக்கோள் இதன் இலக்கான "ஈழத் தமிழருக்கு நிரந்தரமானதும் சமாதானமானதுமான சுயநிர்ணய உரிமை வாழ்வை அவர்களின் பாரம்பரிய நிலத்தில் உருவாக்கி அவர்களின் வாழ்வாதாரத்தை ஊக்குவித்து அவர்களையும் இவ்வுலகில் வாழும் சுதந்திர இனங்களைப் போல வாழவைத்தல் எனக் கொண்டால் த.தே.கூ வின் பணிக்கூற்று" இனப்பிரச்சனைக்கு ஓர் ஏற்றுக்கொள்ளத்தக்க நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொடுத்தல் எனக் கொள்ளலாம்.



- மாயன் -

இவையிரண்டையும் அடையும் இயக்கமாகவே / நடவடிக்கைகளாகவே குறிக்கோள்கள் காணப்படுகின்றன. "குறிக்கோள்களில்லா வாழ்வு கப்பலில்லா மாலுமி" போன்றது என எம் தமிழ் மொழி கூறுகிறது. எனவே த.தே.கூ குறிக்கோள்களில் முக்கியமானதாக கொள்ளவேண்டியது அதன் பணிக் கூற்றான "இனப்பிரச்சனைக்கு ஓர் ஏற்றுக் கொள்ளத்தக்க நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொடுத்தல்" என்பதை அடையக்கூடிய வழிகளை அகழ்ந்தெடுத்தல் (Articulating) எனலாம். இவ்வழியின் முன் எழுந்து நிற்கும் இரு கேள்விகளே **எது** இனப்பிரச்சனைக்கான நிரந்தரத் தீர்வைப் பெற்றுத்தரும் ... அதனை **எவ்வாறு** அடைய வேண்டும் என்பதும் ஆகும்.

எது இனப்பிரச்சனைக்கான தீர்வு என எழும் வினாவுக்கான சாத்தியமான விடைகளில் (Feasible solution) இரண்டு விடைகளைப் பற்றி ஆராய்வோம். முதலாவது சாத்தியமான தீர்வாக எம்முன் இருப்பது **"தமிழருக்கென்றோர் தனிநாடு "** என்பதாகும். இதனை ஈழம் என்று சொல்லலாமா? என்றால் இல்லை ஈழம் என்பது வரலாற்றுக் காலம் தொட்டு இலங்கை முழுவதையும் குறித்து நிற்கும் சொல்லாக இருப்பதால் இச்சொல் வலுவற்றுப் போகின்றது. ஆயின் தமிழீழம் எனும் சொல் ஏற்றுக்கொள்ளத்தக்கதா? என்றால் இதனை சாத்தியமான தீர்வுக்கான ஓர் சொல்லாக ஏற்றுக்கொள்ள முடியும் என்பதே விடையாகும். ஆனால் **"தமிழீழம்"** என்பது உலக நாடுகள் யாவற்றாலும் தப்பார்ப்பிதம் செய்யப்பட்டு விட்ட நிலையில் அவ்வார்த்தை உலக சமாதானத்திற்கு எதிரான வார்த்தையாக்கப்பட்டு விட்டதால் (அதன் பெருமை முன்னால் வெளிவிவகார அமைச்சர் திரு.கதிர்காமரரையே சாரும்) அதன் சாத்திய நிலமை முற்றமுழுதாக தகர்ந்து போய்விட்டது. அவ்வார்த்தையைத் தாங்கி நின்ற அமைப்பு பெரும்பாலான உலகநாடுகளில் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பாக மாறிவிட்டதால் "தமிழ் ஈழம்" எனும் வார்த்தைப் பயன்பாடு தவறியும் இனி தமிழரின் சாத்தியமான தீர்வாக அடுத்த சில பத்தாண்டுகளுக்கு உள்நாட்டில் இயங்கும் அமைப்புக்களால் உச்சரிக்கப்பட முடியாததாகவே இருக்கும்.

அடுத்து சாத்தியமான தீர்வாக எம்முன் நிற்பது தமிழருக்கென்ற ஒரு தமிழரசு ஆகும். இங்கு தனியரசு என்பதன் விளக்கத்தை சரியாக வரையறைசெய்து கொள்ளவேண்டிய தேவை தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு உள்ளது. எனது மொழியில் தனியரசு என்பது இலங்கையின் இறைமையைப் பாதிக்காத வகையில் வேறுவிதமாக சொல்லப் போனால் இலங்கையில் இருந்து பிரிந்து செல்லாமல் இலங்கை நாட்டிற்குள்ளேயே சுய நிர்ணயத்தை சகல விடயங்களிலும் நிலை நாட்டக் கூடிய அரசாக ஓர் தனியரசைக் கட்டி எழுப்புதல் சாத்தியமான தீர்வாகவே உள்ளது. இக்கணத்தில் உடனடியாகவே எம்முன் எழும் வினா மாகாண சபை ஆட்சி ஓர் தனியரசுக்கான ஆட்சிக்கருத்துருவாக கொள்ளப்படலாமா? என்பதே. அதற்கான விடையும் எம் எல்லோருக்கும் தெரியும். இலங்கையின் மாகாண சபைகள் பலவீனப்பட்ட நிர்வாக அமைப்பாக இருப்பதற்கு பல காரணிகள் இருந்தாலும் அவற்றுள் இரண்டு முக்கிய விடயங்களை நாம் அவதானிக்க வேண்டும். அவை முறையே நிதி மற்றும் உட்துறையாட்சி என்பவையாகும். உலகம் பொருளாதாரம் எனும் அச்சில் இயங்கிக் கிடப்பதால் பொருளாதாரமே அனைத்தையம் தீர்மானிக்கும் காரணியாக மாறியுள்ளது. இலங்கையின் மாகாணசபைகளை எடுத்துக் கொண்டால் அவற்றின் பொருளாத்ார வளமுலம் மத்திய அரசு என்பதே வருந்தத்தக்க விடயமாகும். மாகாண சபைகள் தமக்கான ஆண்டுச் செலவைக் கையாள்வதற்கு அவை மூலதனச் செலவாய் இருந்தாலென்ன நடைமுறைச் செலவாய் இருந்தாலென்ன மத்திய அரசையே நம்பியிருப்பதால் பெரும்பாலான அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதிக்கோரிக்கைகளை மத்திய அரசு அறுத்தெடுப்பதன் ஊடாக மாநில அரசுகளின் சுயாட்சை பணபலம் ஒட்டு மொத்தமாய் வற்றிப்போய்க் கிடக்கின்றது. அடுத்து உட்துறையாட்சி. இங்கு உட்துறையாட்சி என்பது காவல் துறை மற்றும் காணி அபிவிருத்தி அதிகாரங்களைக் குறித்து நிற்கின்றது. இவ்விடயம் தொடர்பாக நான் பேச வேண்டிய அவசியமேயில்லை எனவே இலங்கையின் மாநில ஆட்சியென்பது விமர்சனங்களுக்கு அப்பாற்பட்ட சுயநிர்ணயம் கிஞ்சித்துமற்ற கொழு ஆட்சி என்றே தமிழருக்கென்ற நிரந்தர தீர்வு விடயத்தில் கொள்ளப்பட் வேண்டும்.

எனில் தனியரசு என்பதை தனிநாட்டிலிருந்து வேறுபடுத்த வேண்டிய தேவை எமக்கு எழுகின்றது. தனியரசு என்பது தனிநாட்டில் இருந்து பின்வரும் முக்கிய விடயங்களில் வேறுபடுகின்றதாகவே நான் கருதுகின்றேன். முதலாவதாக அரசியல் சட்டமும் (Constitution) ஆளும் சட்டமும் இயற்றும் அதிகாரங்கள் எவையும் தனியரசுக்குத் தடுக்கப்பட்டி ருப்பதுடன் தனியரசின் சட்ட நிர்வாகம் (நீதி மன்றங்களும் சட்ட அலுவலர் அமைப்புக்களும்) தனியரசை தன்னகத்தே கொண்டிருக்கும் நாட்டின் கைகளிலேயே இருக்க வேண்டும்.

இரண்டாவதாக நாட்டின் பாதுகாப்பு (காவல் துறை தவிர) தனியரசை தன்னகத்தே கொண்டிருக்கும் நாட்டின் கைகளிலேயே இருக்க வேண்டும். இவ்வாறு பாதுகாப்பு ஒருமுகப்படும் போது (centralised) வெளிவிவகார அமைச்சு யாருடைய கையில் இருக்க வேண்டும் எனும் கேள்வி எழும். இதற்கான விடையாக தனியரசுக்கென ஒரு வெளிநாட்டு அமைச்சும் அத்தனியரசை தன்னகத்தே கொண்ட தனிநாட்டுக் கென ஒரு வெளிவிவ கார அமை ச்சும் காண ப்பட வேண்டும். ஆனால் அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சின் ஊடாகவே தனியரசின் வெளிவிவகார அமைச்சை வெளிநாட்டு அரசுகள் தொடர்பு கொள்ளக் கூடியதான நடைமுறை அங்கு காணப்பட வேண்டும்.

அடுத்து தனியரசினை ஆளும் மக்கள் பிரதிநிதிகளிற் குறிப்பிட்ட அளவிலானோர் அந்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்க வேண்டும். இவர்களின் பெரும்பான்மை விருப்பத்துடனே தனியரசு தொடர்பாக அந்நாடெடுக்கும் தீர்மானங்கள் அமைதல் வேண்டும். இவ்விடயம் தொடர்பான மேலதிக ஆய்வுகளுக்கு இந்திய மாநில ஆட்சி முறைமை, கனடாவின் பன்மை பண்பாட்டு ஆட்சிமுறைமை, சோவியத்தினதும் யூகோஸ்லாவியாவினதும், சமஸ்டி, சோசலிச, இனக்குழும ஆட்சி முறைமை அல்லது பெல்ஜியத்தின் சமஸ்டி ஆட்சி முறைமை போன்றவற்றை த.தே.கூ தமிழர் தீர்வுக்காக கற்க வேண்டியிருக்கும்.

அடுத்த கட்டுரையில் எவ்வாறு எனும் த.தே.கூ வின் குறிக்கோளைப் பற்றிப்.... பேசுவோம்.

**நிறுவன அமைப்பொன்றின் தந்திரோபாயத் திட்டமிடல் கட்டமைப்பின் வரிப்படம்**

**நோக்கு**

↑

**பணிக்கூற்று**

↑

**குறிக்கோள்கள்**
**இலக்குகள்**

↑

**தந்திரோபாயங்கள்**


கிழக்கு மாகாணசபை தேர்தல் - 2012
திருக்கோண்மலை மாவட்டம்



விதி செய்த சமர்
மக்கள் மீது அற்ற காதல்
மரணம் என்பது மரணிக்க
குருதியில் எழுதப்பட்டு விட்ட வரலாறு
அத்தனையும் கனவல்ல - அதனை நனவாக்க
வாக்களிப்போம்
பிரபல பௌதிகவியல் ஆசிரியர்
பரமலிங்கம் நித்தியானந்தம்
(நித்தி மாஸ்டர்)
X 9
இது கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சசி. கிருஸ்ணமூர்த்தியும் எனது நண்பனே தான்.

இருபாலை கட்டைப் பிராயைச் சேர்ந்தவர் நண்பர் சசி கிருஸ்ணமூர்த்தி. தனது அண்ணனின் கஸ்தூரியார் வீதி 'றேடியோஸ்பதி' எனும் திருத்தகத்தில் அவர் வேலையாக இருந்தார். A/L சித்தியடைந்து பேராதனைப்பல்கலைக் கழகத்திற்கு கலைத்துறை நெறியைப் பயில அனுமதியை எதிர்பார்த்திருந்த காலத்தில் அவரை நான் சந்தித்தேன். மிக நேர்த்தியாக உடையணிவதில் பிரியம் கொண்டவர். டானியல் அன்ரனி, ராதேயன், பாலகிரி ஆகியோருடன் அவரைப் பலமுறை சந்தித்துள்ளேன். சிரித்திரன் சஞ்சிகையுடனும், ராதேயனுடனும் இவருக்கு கூடுதலான தொடர்பு இருந்தது. இடதுசாரி சிந்தனையாளனாக இருந்தபோதும் 'சண்' அணியிலிருந்து பிரிந்த வி.ஏ அணியுடன் நெருக்கமாக இருந்தார். ஆயினும் நாம் அரசியல் ரீதியாக எப்போதும் கருத்துக்களைப் பரிமாறுவதில் கவனமாக இருந்தோம்.

இலக்கிய அரசியல் வெறியனான எனக்கு யாழ்ப்பாணத்திலிருந்து ஊர் திரும்ப சில நேரங்களில் நள்ளிரவாகிவிடும் கடைசி பஸ் இரவு 10 மணிக்கு. சில நேரங்களில் பஸ்சைத் தவற விட்டு விடுவேன். இருபது மைல் தூரத்திற்கு 65 சதம் பஸ் கட்டணம். சில வேளைகளில் அதற்கும் தட்டுப்பாடு... டானியல் அன்ரனி வீட்டிலும், கட்சிக் காரியாலயத்திலும் தங்கியுள்ளேன். நாடோடியான எனக்கு ஒரே ஒரு தடவை சசி கிருஸ்ணமூர்த்தியின் வீட்டில் இரவைக் கழிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அன்றிரவு நான் மிகுந்த கஸ்டத்தை அனுபவித்தேன். சசி தனது போர்வையையும் தலையணையையும் எனக்குத் தந்திருந்தார். அதனை பாவிக்க நான் பல விதத்தில் சிரமப்பட்டேன். பிறரது பொருட்களைப் பாவிப்பதில் எனக்கு இப்போதும் ஒரு அசுசை இருக்கிறது. என்மீது சசிக்கு பிரியம் உண்டு என்பதையும், நேர்மைக்கு பயந்தவர் என்பதையும் நான் அறிந்து வைத்திருந்தேன். சிரித்திரன் சிறுகதைப் போட்டியில் நடந்த ஒரு தில்லுமுல்லை அவர் எனக்கும், டானியல் அன்ரனிக்கும் மிகுந்த தயக்கத்துடன் வெளிப்படுத்தினார். அப்போது எங்களுடன் கோ. கேதாரநாதனும் இருந்ததாக ஞாபகம். சுப்பிரமணியம் பூங்காவின் வானொலி விக்கி விக்கி 6 மணி செய்தியை ஒலிபரப்பிக் கொண்டிருந்த நேரம் சிரித்திரன் சிறுகதைப் போட்டியில் கலந்து கொண்ட டானியல் அன்ரனிக்கும், எனக்கும் இச் செய்தி அறிவிக்கப்பட்டது. டானியல் அன்ரனி மிகவும் மனமுடைந்து போய்விட்டான். நண்பனொருவனின் துரோகத்தை அவனால் தாங்கமுடியவில்லை.

அப்போட்டிக்கு "இரண்டு பகல்கள் கழிந்து விட்டன" என்னும் சிறுகதையை நான் அனுப்பியிருந்தேன். அக்கதையையும் டானியல் அன்ரனி எழுதிய கதையையும் (பெயர் ஞாபகம் இல்லை) சிரித்திரனிடமிருந்து நாம் திரும்பப் பெற்றுக் கொண்டோம். சிரித்திரன் சுந்தர் பற்றி நல்ல அபிப்பிராயங்கள் கூறுபவர்கள் இப்போதும் இருக்கிறார்கள். ஆனால் அவரும் சதிக்கு துணை போய் இருக்கிறார். (எனது கதை எங்கேயும் பிரசுரமாகாத கதையாக தொலைந்து போய்விட்டது.).

1969 காலகட்டத்தில் சிரித்திரன் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரத் தொடங்கியிருந்தது. கொழும்பிலிருந்த போது கடிதமூலம் தொடர்பு இருந்தது. யாழ். பல் தொழில் நுட்பக் கல்லூரியில் பயின்று கொண்டிருந்த நான் பிரவுண் வீதியிலுள்ள அவரது வீட்டுக்கு இடைக்கிடை செல்வதுண்டு. சிரித்திரனில் அப்போது செங்கை ஆழியானின் மயான பூமி தொடராக வெளிவந்து கொண்டிருந்தது. அதே சமயம் எழுதியவர் பெயர் குறிப்பிடாமல் "கொத்தியின் காதல்" எனும் தொடர்கதையும் பிரசுரமாகி வந்தது. எழுத்து நடையிலிருந்து அதனையும் செங்கை ஆழியன் தான் எழுதுகிறார். என்று நான் கண்டுபிடித்து விட்டேன். உடனே சிரித்திரன் சுந்தரிடம் சென்று "சிரித்திரன் உங்களது சஞ்சிகையாக இருக்கலாம் நீங்கள் செங்கை ஆழியனைப் பழுதாக்கிவிட்டதோடு.. நீங்களும் பழுதாகிவிட்டீர்கள்." என்று கடும் தொனியில் கூறினேன். பின்னர் தம்மைச் சந்தித்த நண்பர்கள் பலரிடம் எனது விமர்சனத்தைப் பெரும் தன்மையோடு அவர் சிலாகித்ததாக நான் அறிந்து கொண்டேன். பின்னர் ஒரு சமயம் சசி கிருஸ்ணமூர்த்தியும் இந்தச் செய்தியை எனக்கு உறுதிப்படுத்தினார். சிரித்திரன் சுந்தரும் புலிப்பிரமுகர் அன்ரன் பாலசிங்கமும் நெல்லியடி திரு இருதயக் கல்லூரியின் ஒரு வகுப்பு மாணவர்கள். அவர் புலிப்பிரமுகராக அறியப்படாத காலத்தில் சிரித்திரன் சுந்தரின் மகனை இலண்டனுக்கு எடுத்திருந்தார். இதனைச் சுந்தரே என்னிடம் கூறியிருக்கிறார்.

சசி கிருஸ்ணமூர்த்தி பேராதனைப் பல்கலைக்கழகம் சென்ற பின்னர். செம்மலர்கள் இலக்கிய வட்டத்தின் செயற்பாடுகள் முடிவுக்கு வந்து விட்டன. எனது வாழ்வு இலங்கையின் சகல பாகங்களுக்குமான நாடோடி வாழ்க்கையாக அமைந்து விட்ட பிற்காலத்தில் ஓரிரு தடவைகள் அவரைச் சந்தித்துள்ளேன்.

நல்ல சினிமாக்களை அறிமுகம் செய்யும் யாழ் திரைப்பட வட்டத்துடன் அவருக்கு மிகுந்த தொடர்பிருந்தது. A.J.யேசுராசா, சட்டநாதன் போன்றோருடன் அவர் இயங்கினார். நல்ல திரைப்படங்களைப் பற்றிப் பத்திரிகைகளில் குறிப்புக்கள் எழுதினார். பட்டதாரியான அவருக்கு பனை அபிவிருத்திச் சபையில் வேலை கிடைத்திருந்தது. ஒத்தோட முடியாத குணமுடைய சசி கிருஸ்ணமூர்த்தி பல சிரமங்களுக்கு மத்தியில் கடமையாற்றினார். வெளிநாடு செல்வதற்கு முயன்று பண இழப்புகளுடன் நாடு திரும்பினார்.

நாட்டு நிலமை மோசமாக இருந்த காலத்தில் அவருக்கு கொழும்புக்கு இடமாற்றம் [illegible] அன்ரனியின் [illegible] மல்லிகையில் வெளிவந்த அன்ரனியின் அட்டைப்படக் கட்டுரையை மிக உணர்வு பூர்வமாக சசி எழுதியிருந்தார்.

என்ன ஆச்சரியம் அடுத்து வந்த நாட்களில் பயணப்பட கிளாலிப் பாதைகள் தடைப்பட்ட போது விமானப் பயணம் செய்து கொண்டிருக்கையில் அவர் பயணித்த விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டது. அவரும் அவரோடு பயணித்தவர்களும் நாச்சிக் குடா கடலில் சங்கமமாகி விட்டனர். சசியின் நினைவுகளைப் பற்றி யாராவது எழுதினார்களோ நானறியேன்.

இந்தச் சந்தர்ப்பத்திலாவது சசி கிருஸ்ணமூர்த்தியைப் பற்றி எழுதக் கிடைத்தமைக்கு இவ் வாரப்பத்திரிகை ஆசிரியருக்கு எனது நன்றிகள்.

-நந்தினி சேவியர்-

விரும்பியோ, விரும்பாமலோ சசி கிருஸ்ணமூர்த்தி கடமையாற்றிய 'றோடியோஸ் பதி' யில் அவரது கடமையை நான் ஓரிரு மாதங்கள் மேற்கொண்டேன். அதிருப்தி தரும் அவ் அனுபவங்கள்... மிகவும் சங்கடம் நிறைந்தவை. இப்படி நிகழும் என சசி என்னை எச்சரித்திருந்தார். நான் அதற்கு செவி சாய்காதது எனது தவறுதான். இது பற்றியும் இதற்கு அப்பாற்பட்டும் இந்த நாடோடியின் பாடல் மேலும் மேலும் பலவாறாக விகசிக்கும் நிச்சயம்.

மலைமுரசுடன் இலத்திரனியல் தொர்பாடலை மேற்கொள்ள நீங்கள் அஞ்சலிட வேண்டிய முகவரி

malaimurasu@hotmail.com

**செய்திகளை உடனுக்குடன் தெரிவிக்க**

0770180218
0754252042

## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள்

1) பண்ணையொன்றில் பங்குனி மாதம் 20 கோழிகளும், சித்திரை மாதம் 40 கோழிகளும், வைகாசி மாதம் 60 கோழிகளும் வளர்க்கப்பட்டன. எனில் ஆவணி மாதம் எத்தனை கோழிகள் வளர்க்கப்படும்?
   1. 80  2. 120  3. 100

2) ராமிற்கு மூன்று சகோதரர்களும், நான்கு சகோதரிகளும் உள்ளனர். ராமின் சகோதரிக்குள்ள சகோதர, சகோதரிகள் முறையே,
   1. 4 உம் 3உம்  2. 3உம் 4உம்  3. 4 உம் 4 உம்

3) ஒரு திருமண மண்டபத்தில் நீலம், சிவப்பு, மஞ்சள், பச்சை எனும் ஒழுங்கில் 71 மின்குமிழ்கள் ஒளிரவிடப்பட்டுள்ளன. இங்குள்ள மஞ்சள் மின்குமிழின் எண்ணிக்கை யாது?
   1. 17  2. 20  3. 18

4) 120 தை இரண்டால் பெருக்கி 8 ஆல் வகுத்தால் வருவது,
   1. 30  2. 3  3. 80

5) கலை நிகழ்வொன்றில் பிரதம விருந்தினர் உரை பரிசளிப்புக்கு முன்னர் நடைபெற்றது. பரிசளிப்பு விழா விவாதத்திற்கு பின்னர் நடைபெற்றாலும் நடன நிகழ்விற்கு முன்னர் நடைபெற்றது. இந்நிகழ்வில் இறுதியாக நிகழ்ந்த நிகழ்வு எது?
   1. நடனம்  2. பரிசளிப்பு  3. விவாதம்

6) கண்காட்சி ஒன்று 27.08.2011 தொடக்கம் 02.09.2011 வரை நடைபெற்றது. இது நடைபெற்ற நாட்கள் எத்தனை?
   1. 5 நாட்கள்  2. 7 நாட்கள்  3. 6 நாட்கள்

7) நிரல் ஒன்றில் 32 மாணவர்கள் நின்றனர் ரஞ்சித் 10 வதாக நின்றான். அவனது நண்பன் ரவி அவனிலிருந்து ஐந்தாவதாக நின்றான். எனின் ரவி முன் நிரலிலிருந்து எத்தனையாவதாக நின்றான்.
   1. 15  2. 14  3. 16

8) நானும் குமாரும் ஒரே வகுப்பு மாணவர்கள் குமாரை விட 5 வயது குறைந்தவாவள் அவனது தங்கை. தங்கையின் வயதின் 10 மடங்கு அவனின் தந்தையின் வயது. தந்தையின் வயது 30 எனில் எனது வயது யாது?
   1. 8  2. 6  3. 5

9) 16m நாடாவை மூன்று் தடவைகள் சரிபாதியாக மடித்து வெட்டினால் கிடைக்கும் துண்டுகளின் எண்ணிக்கை?
   1. 8  2. 6  3. 3

10) இம்மாத முதலாம் திகதி புதன்கிழமை எனில் 15ம் திகதி எந்தக் கிழமையில் வரும்?
   1. புதன்  2. செவ்வாய்  3. வியாழன்

11) இலங்கைக்கு மேற்கே அமைந்திருப்பது,
   1. தெற்காசிய நாடுகள்  2. ஆபிரிக்க நாடுகள்
   3. [illegible] நாடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு கடந்து போய் வந்த நம் நகரச் சாதனையாளன். லவக்குமார் ரிஷிகேசன்



என்னதான் அதிகாரக் கூச்சல்கள், அரசியல் மாற்றங்கள் பூதாகரப்பட்டுக் கொண்டிருந்தாலும் எம்மிடையேயான சாதனையாளர்களை அவற்றிலிருந்து தூக்கிக் காட்டுகின்ற பாரிய பொறுப்பை தன்னகத்தே விரும்பியேற்ற மலைமுரசு இந்த வாரம் கணிதத்துறையிலே சாதனைகள் புரிந்து கொண்டு எம்மிடையே இருக்கும் திருமலை புனித சூசையப்பர் கல்லூரி மாணவன் லவக்குமார் ரிஷிகேசனை அறிமுகம் செய்கிறது.

சிறுவயதிலிருந்தே கணிதத்துறையில் தானாகவே ஆர்வம் கொண்ட ரிஷிகேசன் குறித்த துறையில் "சரியான அடிப்படை கல்வியையும் அதற்கேற்ற முயற்சியையும்" தான் பெற்றமையாலேயே இந்நிலைக்கு வர முடிந்ததென்று கூறுகிறார்.

கணிதம் மிக இலகுவான துறை அதற்கு சரியான ஆரம்பக்கல்வி இருந்ததால் எமக்கு அத்துறை இன்னும் இலகுவாகிவிடும் என கூறும் ரிஷிகேசன் தன்னுடைய அனைத்து வெற்றிகளுக்கும் தம்மோடு எப்போதும் துணை நின்ற தந்தை லவக்குமார், தாய் சுலோஜனாவோடு தன்னுடைய அனைத்து ஆசிரியர்களுக்கும் குறிப்பாக திரு.ஜெயகிருஸ்ணசீலன், திரு. ளு. சிவகாந்தன், ஓய்வு பெற்ற புனித சூசையப்பர் கல்லூரி அதிபர் அருட்தந்தை அண்டனி பொன்ஷியன், பிரதி அதிபர் திருச்செல்வி சுதாகரன் மற்றும் தனது ஆரம்பக் கல்வியை வழங்கிய றெஜினா அருள்தாசன் ஆகியோரை நினைவு கூறுகிறார்.

பதினாறு வயதடையும் லவக்குமார் ரிஷிகேசன் பின்வரும் சாதனைகளுக்குச் சொந்தக்காரர்,

தரம் 06 இல் -
மாகாணமட்ட கணித வினாவிடைப் போட்டி – முதலாமிடம்
தரம் 08 இல் -
மாகாணமட்ட கணித வினாவிடைப் போட்டி - இரண்டாமிடம்
தரம் 09 இல் -
மாகாணமட்ட கணித வினாவிடைப் போட்டி – முதலாமிடம்
தரம் 10 இல் -
மாகாணமட்ட விஞ்ஞான வினாவிடை போட்டி – முதலாமிடம்.

தரம் 11 இல் - தேசிய ரீதியாக கொழும்பு பல்கலைக் கழகத்தின் ஒலிம்பியாட் பவுன்டேசனால் நடாத்தப்பட்ட சர்வதேச கணிதவியல் போட்டியில் குழு 2 இல் பங்குபற்றிய ரிஷிகேசன் பல்கலைக்கழக குழுவில் **இலங்கை முழுவதிலுமிருந்து தெரிவு செய்யப்பட்ட நான்கு பேருள் ஒருவராக அதுவும் ஒரேயொரு தமிழராக தாய்வான் வரை சென்று பதக்கம் பெற்றிருந்தார்.**

இப் போட்டிக்கு தன்னைத்தயார் செய்தவர் கொழும்பு பல்கலைக் கழகத்தை சேர்ந்த திரு. அக்குருகொடகே புத்திமசுன் பெனார்ன்டோ என பெருமிதத்துடன் கூறுகிறார் ரிஷிகேசன் கணிதத்துறை மட்டுமல்லாது இரசாயனவியல் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் சாதனையாளனாக வேண்டுமென்று ஆசைப்படுவதாக முகமலர்வுடன் கூறிக்கொண்டார்.

சாதனையாளன் ரிஷிகேசனின் சாதனைகள் தொடர மலைமுரசு மனமார வாழ்த்துகின்றது.

செம்பியன்

## கவிஞர். சி. சிவசேகரத்தின் "இன்னொன்றைப் பற்றி"தொகுப்பிலிருந்து இரு கவிதைகள்.

### அவற்றுக்குரிய அரசியல்.

ஒவ்வொரு தெருவிலும்
குறுக்கும் மறுக்குமாய்த் தொங்குகிற
பிளாஸ்றிக் கொடிவரிசையும்
அரசியல் வாதிகளின் படங்களால்
சுவர்களை அசிங்கப்படுத்தும்
சுவரொட்டிகளும்
நாலு ஆள் உயரத்தில்
நிமிர்கின்ற கட்டவுட்டுகளும்
முடிவில்

குப்பையோடு குப்பையாகும்
அவற்றுக்குரிய அரசியல் போல

ஆனாலும்
அவை அழியும் போது
அழுக்கை அதிகமாக்கிக் கான்களை
அடைத்து
சுற்றாடலை அசுத்தப்படுத்துமே
அவற்றுக்குரிய அரசியல் போல.

### விமர்சனம் பற்றி

மாலைவானிடம்
சிவப்பு நிறமொன்று கேட்டேன்
பல நூறு செந்நிறங்களை
என் முன் விரித்தது
நான் விரும்பும் செந்நிறம்
இதில் இல்லையே என்றேன்
வருந்தி முகங்கறுத்து இருளிற்
புதைந்தது

காலைவானிடம்
சிவப்பு நிறமொன்று கேட்டேன்

பல நூறு செந்நிறங்களை
என்முன் விரித்தது
நான் விரும்பும் செந்நிறம்
இதில் இல்லையே என்றேன்
என்னால் இயன்றது
இவ்வளவே என்று
பொன்னாக முறுவலித்து
ஒளி வெள்ளத்திற் கலந்தது.

### அவன் வழியில்

யாரிந்த மனிதன் யாருக்குத்
தோழன்
ஏரிக்கரை பக்கம் ஏனிவனின்
சடலம்
இனச் சண்டையா பணச்
சண்டையா
இதற்கிடையில் மாண்டானா

ஆட்கூலி யாரேனும்
அடித்திவனை போட்டாறோ
மனக் கண்ணைக் குத்துமிவன்
மரணத்தின் கதையென்ன

பேச்சாலே சூதாடிபெரியநம்
நிலத்தினை சுருட்டிய
பேய்களின் சுயரூபம் காட்டியவன்
இருட்டிலே சுடுபட்டு
இந்நிலைக்கு வந்தானோ
மாய்த்தானோ தன்னுயிரை
மானமுள்ள மனிதனிவன்

விடுபட்ட இவனாவி விபரங்கள்
அறியுமோ?

கெடுகாலம் நமக்குள்ளே
நெடுநாட்கள் இருந்ததோ

நியாயங்கள் அழிவதில்லை
நிச்சயம் பிழைக்குமெனில்
காயம்கொண்ட இம் மரணத்தின்
கதையென்ன

ஏதேதோ செய்தவன்
இவனென்று சொன்னாலும்
தீதேதும் செய்யாத தமிழ்ப் பிறப்பு
இவனன்றோ
பிறப்புக்காம் காரணத்தைக்
கேட்காது விட்டாலும்
இறப்புக்காம் காரணத்தைக்
கேட்டிடுவீர் எல்லோரும்

பாருங்கள் மனதிற்குள் வலிதெரியும்
வாருங்கள் செல்வோம் அவன்
வழியில்.

- திருமலை சுப்ரா -





வியாபாரம் பெருக்க விளம்பரம் செய்யுங்கள்.
வர்ன விளம்பரங்களும் ஏற்றுக்கொள்ளப்படும்

தொடர்புகளுக்கு:
159A, 2வது மாடி, கடல் முக வீதி, திருகோணமலை.
malaimurasu@hotmail.com, 0754252042
58, வித்தியாலயம் வீதி, திருக்கோணமலை.



இது கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளை - ஒரு வடிகட்டி

Wake Forest Baptist மருத்துவ ஆய்வு மையத்தில் திரையில் வெளிப்படும் வடிவங்களை பகுத்தறியும் திறன் பயிற்றுவிக்கப்பட்ட இரு குரங்குகள் கணணிகள் முன் அமர்ந்திருக்க அவற்றின் மூளைச் செயற்பாட்டு பதிவுகளுடன் கூடிய ஆய்வுகள் மேலும் முன் நோக்கிச் செல்கின்றன.



ஒரு கணப்பொழுதில் பல கோடிக்கணக்கான காட்சி விம்பங்களால் முற்றுகை இடப்படும் மனித மூளையானது, அவற்றில் முக்கியமற்றதை புறக்கணித்து மிகமுக்கியம் வாய்ந்தவற்றை வடிகட்டி ஏற்றுக் கொள்ளும் வியத்தகு செயற்பாட்டின் பின்னணி என்ன என்பதே இவ் ஆய்விற்கான அடிப்படையாகும்.

மனித மூளையின் இவ் அசாதாரண செயற்பாடு "தேர்வுக் கருத்தூக்கம்" (Selective attention) எனப்படுகிறது. விஞ்ஞானிகளால் நீண்ட நாட்களாக விவாதிக்கப்பட்ட இவ்விடயத்திற்கு தற்சமயத்தில் Wake Forest Baptist ஆய்வு மைய ஆய்வாளர்களின் கண்டுபிடிப்பு மிக உதவியாக அமைந்திருக்கின்றது. குரங்குகளை கொண்டு நடாத்தப்பட்ட இவ் ஆய்வின் விளைவாக "மூளைய முன்படை" (Prefrontal cortex) எனப்படும் மனித மூளையின் ஒரு பகுதியே மிகத் தேவையான விடயங்களை மட்டும் உள்வாங்கிக் கொள்ளும் சக்திக்கு அடிப்படையாக அமைகிறது என தெரிய வருகின்றது.

கீழிருந்து மேல் நோக்கிய (Bottom – up) மற்றும் மேலிருந்து கீழ் நோக்கிய (Top – down) இரு வகையான அவதானிப்பு செயற்பாடுகள் தேர்வுக் கருத்தூக்கச் செயற்பாட்டில் இடம்பெறுகின்றது. நெடுஞ்சாலை ஓரத்தில் காணப்படும் விளம்பர பதாகை போன்று ஒரு விடயம் அதன் நிறம், வடிவம், இயக்கம் போன்றவற்றால் அவற்றின் பின்னணியில் இருந்து துல்லியமாக தெரிவதை அவதானிக்க கீழிருந்து மேல் நோக்கிய அவதானிப்பும், சனக்கூட்டத்தில் உறவினரை கண்டுபிடிப்பது போல் குறிப்பிட்ட நோக்கத்துடனான அவதானிப்பிற்கு மேலிருந்து கீழ் நோக்கிய அவதானிப்பும் உதவுகிறது.

இவற்றில் கீழிருந்து மேல் நோக்கிய அவதானிப்பானது "மூளைய பின்படை" (Posterior parietal cortex) பகுதியிலும் மேலிருந்து கீழ் நோக்கிய அவதானிப்பானது "மூளைய முன்படை" (Prefrontal cortex) பகுதியிலும் ஏற்படுகின்றது என விஞ்ஞானிகள் பாரம்பரியமாக நம்பியிருந்தனர்.




தொகுப்பு : பைரவி

"அவதானிப்பை வழிகாட்டியாக கொண்டு இயங்கும் நரம்புத் தொழிற்பாடுகள் தொடர்பான உள்ளாராய்விற்கு எமது ஆய்வறிக்கைகள் களம் அமைத்துள்ளன." என கூறும் Wake Forest Baptist ஆய்வு மைய பேராசிரியரும் இக் கற்கையின் சிரேட்ட கர்த்தாவுமாகிய கிறிஸ்டோல் கொன்ஸ்டான்டினிடிஸ் இது தொடர்பாக மேலும் விளக்குகின்றார்.

"உலகளாவிய ரீதியில் பல கோடி மக்கள் அவதானிப்பை மையப்படுத்த முடியாமை, தரவுகளை தேவைக்கேற்ப பகுத்தறிய முடியாமை போன்ற வியாதிகளால் நிலைகுலைந்துள்ளனர்." இத்தகைய நிலை "கருத்தூக்கக் குறைவுத் தளம்பல் வியாதி" (Attention deficit hyperactivity disorder (ADHD)) எனப்படும். இவ் அபாயத்தகு வியாதிக்கு தீர்வாக எமது ஆய்வு அமையும் என்கிறார். தற்போது வரை மிகமுக்கியமான தகவல்கள் மூளையின் பின்படையில் மட்டுமே பதிவுறுவதாக விஞ்ஞானிகள் நம்பியிருந்தனர். ஆனாலும் எமது துல்லியமான ஆய்வுகளின் அவதானிப்புக்கள் மிகமுக்கியமான தகவல்கள் மூளைய முன்படையில் பதியப்படும் அதே சமயம் மூளைய பின்படையிலும் பதியப்படுகிறது என்பதை நாம் காட்டியுள்ளது.

இதன் சாராம்சமாக மூளைய முன்படை தனக்கே உரிய மேலிருந்து கீழ் நோக்கிய அவதானிப்புடன், மேலும் சிறப்பம்சமாக கீழிருந்து மேல்நோக்கிய அவதானிப்பையும் முன்னராகவே மேற்கொள்கிறது என தெரிவிக்கும் விஞ்ஞானிகள் இப்புதிய கண்டுபிடிப்பு கருத்தூக்கக் குறைவு தளம்பல் வியாதி எனும் குறைபாட்டை நிவர்த்தி செய்ய வருங்காலத்தில் பெரும் பங்களிப்பு செய்யும் என்பதையும் தெரிவித்துள்ளனர்.

**குறிப்பு:**

இக்கட்டுரையில் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ள ஆங்கிலப் பதங்கள் ஆசிரிய பீடத்தினால் மேற்கொள்ளப்பட்டது. துறைசார் வல்லுனர்கள் இவ்வாங்கிலப் பதங்களுக்கான சரியான தமிழ்ப் பதத்தினை தெரியப்படுத்தினால் சிறப்பாகவிருக்கும்.

# பதவி வெற்றிட அறிவித்தல்கள்

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

**தமிழ் மொழி மூல விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி**

**மட்டக்களப்பு மண்முனை மேற்கு கன்னங்குடா பிரிவில் பிறப்பு மற்றும் இறப்பு மற்றும் மண்முனை மேற்கு பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி.**

1. விண்ணப்பதாரர்கள் உரிய விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளி களாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
2. இப்பதவிக்காக பெண், ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.
3. வயதெல்லை 30 தொடக்கம் 60 பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2012, புரட்டாதி மாதம் 17 ஆந் திகதியோ அதற்கு முன்போ குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ.எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,

**இலங்கை பொலிஸ் திணைக்களம்**

**பொலிஸ் கொஸ்தாபல் சாரதிப் பதவி**

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவிக்கு இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்**

**ஆயுர்வேத சமூக சுகாதார உதவி மருத்துவர் சேவையின் வினைத்திறன்காண் தடைப் பரீட்சை - 2012**

இலங்கை ஆயுர்வேத சமூக சுகாதார உதவி மருத்துவர் சேவைக்குரிய மருத்துவ அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை யானது ஆயுர்வேத ஆணையாளரினால் கொழும்பில் நடாத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சு**

**நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் சமையற்காரர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்**

நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்திற்கு உரித்தான பரத்தவில் அமைந்துள்ள சிறுவர் பயிற்சி மற்றும் ஆலோசனைச் சேவைகள் நிலையத்தில் தற்போது வெற்றிடமாகக் காணப்படுகின்ற சமையற்காரர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**துறைமுகங்கள் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

**வணிகக் கப்பல்துறைப் பணிப்பாளர் நாயக அலுவலக பதவிவெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்புகீழ்க்குறிப்பிடப்படும் பதவிகளுக்கான தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

வெற்றிடத்துக்கான பதவிகள் :

துறைமுக அரச கட்டுப்பாட்டு அலுவலர்(பொறியியல்) தரம் 1 வெற்றிடம்01

அரச கப்பல் அளவையாளர் தரம் 1 01 பரீட்சை பரீட்சகர் (பொறியியல்) தரம் 1 வெற்றிடம் 01

துறைமுக அரச கட்டுப்பாட்டு அலுவலர் (தளம்) தரம் 1 வெற்றிடம் 01

**விண்ணப்பிக்கும் முறை.-** விண்ணப்பப் படிவத்தை பூர்த்திசெய்து பதிவுத்தபாலில் 2012, ஓகத்து 30 ஆந் திகதி யன்று அல்லது அதற்குமுன் பணிப்பாளர் நாயகம், ,வணிக கப்பல்துறை பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகம், இலக்கம் 43.:. 89, பிரிஸ்டல் பில்டிங், 1 ஆவது மாடி, யோர்க் வீதி, கொழும்பு 1" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.


உயர்தரப் பரீட்சைகளின் பின் உலகம் நோக்கிப் பயணிக்க உங்களுக்குத் தேவையான ஆங்கில கல்வி நெறி
UNIVERSITY OF CAMBRIDGE Key English Test (KET)
முழுநேர 3 மாத கல்வி நெறி செப்டெம்பர் 1st திகதி ஆரம்பம்.
Veal Business College
No:159 A,Sea Viwe Road Trincomalee. Tel: 026 2227 622 , 077 7555 738

உன்னுடைய அவமானங்களை சேகரித்து வை அது இன்னொரு முறை அவமானப்படாமல் பாதுகாக்கும் -ஹிட்லர்-

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## Sunday Observer:

### குறிவைக்கின்றது கூடியளவு வெளிநாட்டு முதலீடுகளை இலங்கையின் முதலீட்டுச் சபை!

இலங்கை முதலீட்டுச் சபையானது உற்பத்தி, ஏற்றுமதி நோக்கம் கொண்ட சேவைகள், அறிவுசார் சுற்றுலாத்துறை வியாபாரங்கள், உயர்கல்வி, விவசாயம், உட்கட்டுமானம் ஆகியவற்றினூடான பெருமளவு வெளிநாட்டு முதலீடுகளை 2012ல் உள்ளீர்க்கத் திட்டமிட்டுள்ளது.

கடந்த வருடத்தில் 1.1 பில்லியன் அமெரிக்க டொலர்களை நேரடி வெளிநாட்டு முதலீடாக கொண்டு வந்த இலங்கை முதலீட்டுச் சபை 2012ன் முதல் காலாண்டில் 238 மில்லியன் அமெரிக்க டொலர்களை நேரடி வெளிநாட்டு முதலீடாக கொண்டுவந்துள்ளது.

### "திவி நெகும" வங்கிகள் உருவாகின்றன.

அண்மையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட திட்டமொழிவினூடாக திவிநெகும சமூகம் சார் வங்கிகள் உருவாக்கப்படவுள்ளன.

இவை திவிநெகும திணைக்களம் எனும் புதியதொரு திணைக்களத்தால் முகாமை செய்யப்படவுள்ளது. இத்திணைக்களம் சமுர்த்தி அதிகாரசபை, தெற்கு அபிவிருத்தி அதிகார சபை, உடரட அபிவிருத்தி அதிகாரசபை ஆகியவற்றை இணைத்து உருவாக்கப்படவுள்ளன.

### TESO வின் முயற்சி தோல்வி

முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சரின் TESO மாநாட்டிற்கு இந்திய மத்தியரசினதும், மாநில அரசினதும் ஆதரவைத் திரட்டும் முயற்சி தோல்வியடைந்துள்ளது. அத்துடன் இம்மாநாட்டில் கலந்துகொள்ள உள்ள வெளிநாட்டுப் பிரமுகர்கள் எவரும் தற்போதுவரை தமது சம்மதத்தை வெளியிடாமலும் இருக்கின்றனர் என அதிகாரம்கொண்ட வெளிநாட்டு அலகு தெரிவித்துள்ளது.

### கவலையீனத்தால் உயிரிழந்தனர் வெளிநாட்டுப் பெண்கள்

எச்சரிக்கைகளைக் கவனத்தில் கொள்ளாது இலங்கையைச் சுற்றும் சுற்றுலாப் பயணிகளில் இருவர் தமது கவலையீனத்தால் கடந்த வாரத்தில் தமது உயிரை இழந்தனர்.

ஒருவர் கடலில் மூழ்கியும் மற்றொருவர் புகையிரதத்தால் மோதுண்டும் மரணமாகியுள்ளதாக காவல்த்துறை ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

### சமூக நலநோன்புத் திட்டத்தின் கீழ் ஜப்பானிய உதவி

"அடிநிலை மனிதப் பாதுகாப்பு" த்திட்டத்தினை ஊக்குவிக்கும் முகமாக சுமார் 3.7 மில்லியன் ரூபாய்களை செயற்கைக்கால் பொருத்தும் திட்டத்திற்கு ஜப்பான் வழங்குகிறது. இதனடிப்படையில் "Friends - in - Need" சங்கத்திற்கு வழங்கப்பட்ட இந்நிதியுதவியூடாக இச் சமூகச் சங்கத்தின் செயற்கைக் கால்களை உருவாக்கும் உற்பத்தி வலுவை அதிகரிப்பதே நோக்கமாகும். ஆண்டுதோறும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாற்று வலுவுள்ளோர்க்கான கால்களை இவ்வமைப்பு இலவசமாகப் பொருத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## The Sunday Leader

### VITOL இன்னும் வர்த்தகத்திலுள்ளது.

VITOL குழுமத்துக்குச் சொந்தமான மற்றொரு எண்ணெய் தாங்கிக் கப்பலொன்று கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ளது. இக்கப்பலில் இருந்து பெற்றோலியத்தினை இறக்குவதற்கு தொழினுட்ப அனுமதியை பெறவேண்டியுள்ளதால் இன்னமும் எண்ணை கப்பலிலருந்து இறக்கப்படாமலுள்ளது.

VITOL குழுமத்தினூடாக முன்னைய காலங்களில் இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோல் மாசடைந்திருந்ததால் பெருமளவு வாகனங்கள் இலங்கையில் பாதிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. இதனால் இக்குற்றச்சாட்டு தொடர்பாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துடன் (இ.பெ.கூ), VITOL குழுமம் கடுமிப் பிடிச் சண்டையில் இருக்கும் நேரத்தில் 20,000 தொன் பெற்றோலியத்துடன் கப்பல் கொழும்புத் துறைமுகத்தில் கட்டப்பட்டுள்ளது. "இ.பெ. கூட்டுத்தாபனத்தின் வழங்குனர் பட்டியலில் இருந்து VITOL குழுமத்தின் பெயர் நீக்கப்பட்டிருப்பினும் வந்தடைந்துள்ள பெற்றோலியத்தின் மாதிரிகள் துபாய்க்கு பரீட்சிப்புக்காக அனுப்பப்பட்டுள்ளதாகவும் அதில் வெற்றியடைந்தால் இப்பெற்றோலியம் நாட்டுக்குள் பாவனைக்கு விடப்படும்" எனவும் பெற்றோலியத்துறை அமைச்சரும், அமைச்சின் செயலாளரும் கூறியுள்ளனர். மேலும் இப்பெற்றோலியத்திற்கான கேள்விக் கட்டளை VITOL குழுமம் கறுப்புப்பட்டியலிடப்பட முன் வழங்கப்பட்டுவிட்டதாகவும் அரசின் கேள்விக்கட்டளைக்கு அமையவே இப் பெற்றோலியம் துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாகவும் மேலும் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

VITOL குழுமம் தனக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட குற்றச்சாட்டை நிராகரித்துள்ளதுடன் முன்னைய காலங்களில் தாம் இலங்கைக்கு வழங்கிய பெற்றோலியப் பொருட்கள் கொழும்புத் துறைமுகத்தில் இ.பெ.கூ தொழினுட்பவியலாளர்களினால் பரீட்சிக்கப்பட்டு பின்னர் களஞ்சியப்படுத்தப்பட்டதாகவும் அதன் பின்னரே அது மாசுபடுத்தப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளது.

### கொலைக்குற்றவாளி மீண்டும் பிரதேச சபையின் பிதாவானார்

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளரின் அறிவுறுத்தலுக்கமைய தங்காலை பிரதேச சபையின் நீக்கப்பட்ட நகர பிதா மீள நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் கடந்த டிசம்பர் மாதம் பிரித்தானிய பிரஜை ஒருவரின் கொலையுடன் சம்பந்தப் படுத்தப்பட்டு கைது செய்யப்பட்டிருந்தார்.

ஜூலை மாதம் 25ம் திகதி ஐ.ம.சு.கூட்டமைப்பின் உறுப்பினர் பதவியிலிருந்தும் நகர பிதா பொறுப்பிலிருந்தும் நீக்கப்பட்ட இவர் ஜூலை 29ம் திகதி இழந்த அனைத்தையும் மீள பெற்றுக்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### இலங்கை காவல் துறையால் குறி வைக்கப்படும் போதைப் பொருள் கடத்தல்

இலங்கை காவல் துறை கடந்த 7 மாதங்களில் 20,000 போதைப்பொருள் கடத்தல்காரர்களைக் கைது செய்து சாதனை படைத்துள்ளது.

"போதை மருந்து கடத்தல் தொடர்பாக புதிய புலனாய்வு முறைகளை பின்பற்றியதால் இதனைச் செய்ய முடிந்தது" என இலங்கை காவல் துறையின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். போதை மருந்து கடத்தலுக்கான உயர்ந்த பட்ச தண்டனையாக இலங்கைச் சட்டக்கோவை மரண தண்டனையை விதித்துள்ளது. எனினும் தண்டனையின் அளவு கடத்தல்காரர்களிடமுள்ள போதைமருந்தின் அளவிலேயே தங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### மின் தடைக்குக் காரணம் பழுதடைந்த இயந்திரங்களே - இலங்கை மின்சார சபை மறுப்பு

தற்போது இலங்கையில் நிலவும் மின்சார தடைக்கு இயந்திரப்பழுதே காரணம் என எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கு மின்சார சபை மறுப்பு தெரிவித்திருக்கிறது. "பிரதான வழங்குவடங்களில் ஏற்பட்டுள்ள தடையினாலேயே நுரைச்சோலை மின்பிறப்பாக்கியிலிருந்து மின்னைப் பெற முடியாதிருப்பதாக" இலங்கை மின்சார சபை தலைவர் தெரிவித்துள்ளார். அத்துடன் மின்பிறப்பாக்கிகளுக்கான டீசல் கிடைப்பதில் எழுந்துள்ள குறைபாடும் மின் வழங்களுக்கு தடையாக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். பாவனைக்குதவாத இயந்திரங்களால் மின் தடை நிகழ்வதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்களை வன்மையாக அவர் மறுத்துள்ளார்.

### அமைச்சரின் அடாத்துக்கெதிராக வீட்டுரிமையாளர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம் சிறீதர் சினிமாவில் நீண்டகாலமாக தமது அலுவலகத்தைப் பேணிவரும் பாரம்பரிய சிறுகைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு எதிராக சிறீதர் சினிமாவின் உரிமையாளரால் "சிறீதர் சினிமாவில் அமைச்சர் அடாத்தாக குந்தியிருப்பதாக" குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

## The Sunday Times:

### கொழும்பின் பிரதான நிலப்பரப்பு தொடர்பாக இந்தியா – சீனாவிடையே முரண்

கொழும்பிலுள்ள பிரதான நிலத்துண்டு ஒன்றை இந்தியாவுக்குத் தருவதாக வாக்களித்திருந்த இலங்கை அரசு அதனை சீன விமானக் கம்பனி ஒன்றுக்கு வழங்கிவிட்டதை கடுமையாக இந்தியா ஆட்சேபித்துள்ளது.

இவ் ஆட்சேபம் டில்லியிலும் இலங்கையிலும் உள்ள இலங்கையின் தூதரகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக இலங்கையின் வெளிநாட்டு வெளிவிவகார அமைச்சின் பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரி தெரிவித்தார். காலி வீதியையும் டுப்ளிகேஷன் வீதியையும் இருமுனைகளாகக் கொண்ட 287 பேர்ச் அளவு கொண்ட இக்காணித்துண்டினை இந்தியாவுக்கு வழங்குவதாக கொடுக்கப்பட்ட இலங்கையின் வாக்குறுதிகளை அடுத்து இந்திய வெளிவிவகார அமைச்சு அதனைப் பெற்றுக்கொள்வதற்கான அனைத்து அடிப்படை விடயங்களையும் பூர்த்தி செய்திருந்த வேளையில் இக்காணித்துண்டை தற்போது சீன விமான கட்டுமாண கம்பனிக்கு இலங்கை பாரப்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

**உங்கள் கேள்விகளுக்கு மலைமாடன் பதில் தருகின்றார். கேள்விகளை மலைமுரசிற்கு தபாலிலோ அல்லது மின்னஞ்சலிலோ அனுப்பிவையுங்கள்.**

மின்னஞ்சல் - malaimurasu@hotmail.com
தபால் முகவரி - 159A, 2nd Floor, Sea view Road, Trincomalee.


**திருக்கோணமலையிலிருந்து வாரந்தம் ஞாயிற்றுக்கிழமைகளில் வெளிவரும் மலைமுரசு பத்திரிகையில் உங்கள்**

விளம்பரங்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், திருமண நாள் வாழ்த்துக்கள், சாதனையாளர் வாழ்த்துக்கள், மரண அறிவித்தல்கள், நினைவு நாட் குறிப்புகள், அந்தியேட்டி அழைப்பிதழ்கள், பெருநாள் வாழ்த்துக்கள்



போன்றவை இடம்பெற வேண்டுமா?

தொடர்புகளுக்கு

அலுவலகம் - 159A, 2nd floor, Sea view Road, Trincomalee. 077 018 0218
விளம்பர முகவர் - 58, Vidyalayam Road, Trincomalee. 077 366 3103


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நீள்கிறதுமின்வெட்டு...

க.பொ.த உயர்தரப்பரீட்சையும் புலமைப் பரிசிற் பரீட்சையும் நடைபெறும் இக்காலப் பகுதியில் மின்வெட்டின் அறிமுகம் கல்வியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தப் போவதுடன் இலங்கையின் உற்பத்தித் துறையிலும் தாக்கத்தை உருவாக்கப் போகின்றது. மட்டின்றி விலைகள் வானுயர அதிகரிக்கும் இக்காலத்தில் மின்வெட்டுச் சுமையையும் இலங்கையரான நாம் சுமக்கத் தயாராவோம்.

### புதிய உறுப்பினராக...

தமிழ்தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தனின் திருக்கோணமலை இல்லத்தில் அவர் முன்னிலையில் கடந்த 3ம் திகதி வேலாயுதம் மோகன் சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்றுக் கொண்டார். இந்நிகழ்வில் மாவட்டத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் க. துரைரெட்ணசிங்கமும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### பஸார் தபாலகம்...

பஸார் தபால் அலுவலகம் அமைந்துள்ள இடத்தை காட்டும் பெயர்ப் பலகை பிரதான வீதியில் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்படாமையே இதற்கு காரணம். பஸார் தபால் அலுவலகம் நகரின் பிரதான வீதியில் திருக்கோணமலை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இரண்டு மாடிக் கட்டிடத்தின் பின்புறமாக அமைந்துள்ளது. அதனை வெளிப்படுத்தும் வகையிலான பெயர்ப்பலகை பிரதான வீதியின் முன் புறமாக பொது மக்கள் காணும் விதமாக வைக்கப்படாமையினால் பஸார் தபால் அலுவலகத்தை நாடி வரும் பொது மக்கள் அந்த அலுவலகம் எங்கு இருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்க முடியாமல் அலைந்து திரிவதை அவதானிக்க முடிகின்றது. பஸார் தபால் அலுவலகம் எங்கு அமைந்திருக்கிறது என்பதைப் பொது மக்களுக்கு தெரியப்படுத்தும் வகையில் பிரதான வீதியில் பெயர்ப் பலகையை வைத்து உதவ வேண்டும் என்று தபால் திணைக்கள அதிகாரிகளுக்கு பொது நல அமைப்புக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

### 200 பேருக்கு...

பல்கலைக்கழக மாணவன் ஜெ.ஜெனார்த்தனன் தலைமையில் இத்தேர்தல் விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தேசிய அடையாள அட்டைகள் இல்லாததால் வாக்களிக்க முடியாத நிலைக்கு உள்ளாகியிருக்கும் இவ்விருநூறு பேருக்கும் தென்னமரவாடி கிராம சேவையாளர் ஊடாக தற்காலிக அடையாள அட்டை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கையை எடுப்பதாக வேட்பாளர் ஜெ.ஜெனார்த்தனன் பாதிக்கப்பட்ட அம்மக்களுக்கு உறுதி அளித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### கட்டைப்பறிச்சானிலும் கூட்டமைப்பின் தேர்தல் முழக்கம்



கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்காக தேசிய உணர்வுடன் தமது பிரசார முன்னெடுப்புக்களை தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் மேற்கொண்டு வருகின்றனர். கடந்த 2009 ஆம் ஆண்டு பிற்பகுதியுடன் மௌனித்திருக்கின்ற தமிழரின் தேசியத்துக்கான பேரிகை தற்போது மீண்டும் ஒலிக்கத் தொடங்கியிருக்கின்றது. கடந்த 2012.08.15 ஆந் திகதி கட்டைப்பறிச்சானில் இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் தேர்தற் பிரசாரக் கூட்டத்தில் 300 இற்கம் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டு தமது ஆதரவினைத் தெரிவித்திருந்தனர்.

கற்பக விநாயகர் கோவில் அறங்காவலர் சபையின் செயலாளர் திரு.ச.வருணகுலசிங்கம் தலைமையில் கற்பகவிநாயகர் அரங்கில் இடம்பெற்ற கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை வேட்பாளர் திரு.சி.தண்டாயுதபாணி, மூதூர் வேட்பாளர் திரு.கு.நாகேஸ்வரன், வெருகல் வேட்பாளர் திரு.ச.விஜயகாந் ஆகியோருடன், கூட்டமைப்பின் மூத்த உறுப்பினர்களான திரு.ஜேசுதாஸன், திரு.கனகமகேந்திரன், மூதூர் பிரதேச சபையின் முந்நாள் எதிர்க்கட்சித் தலைவரும் சமூக சேவகருமான திரு.க.திருச்செல்வம், மூதூர் ப.நோ.கூ.சங்கத்தின் தலைவரும் தமிழ்ப் பற்றாளருமான திரு.க.கனகசிங்கம் ஆகியோர் கலந்து உரையாற்றினார்கள்.

நான்கு மணிநேரம் இடம்பெற்ற இக்கூட்டத்தில் வீட்டுச் சின்னமே தமிழரின் விடுதலைச் சின்னம் என்ற முழக்கமே எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலின் வெற்றியைப் பறைசாற்றியது. மூதூரில் வேறெங்கும் இதுபோன்ற சனத்திரள் கூட்டமைப்பின் தேர்தற் பிரசாரக் கூட்டங்களில் கலந்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### காணிகளிற்காய் வருகை...

பலவருடங்களாக தாம் இந்த பகுதியில் வசித்து வருகின்ற போதிலும் தற்போது அரசியல்வாதி ஒருவரும் வர்த்தகர் ஒருவரும் குறித்த காணிக்கு உரிமை கோருவதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தமது உரிமையை உறுதி செய்தற்கு காணி உறுதிப்பத்திரத்துடன் கூடிய சாட்சியங்கள் உள்ளதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். கிராமவாசிகள் தமது பிரச்சனைகள் உள்ளடங்கிய மனுவொன்றையும் மாவட்ட செயலாளரிடம் ஒப்படைத்துள்ளதாகக் தகவல்கள் வெளியாகியுள்ளது.

### வெளித் தேச வலுவிற்கு..

உத்தியோகத்தர்கள் ஆலோசனைகளை வழங்க" இலங்கைக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என கூட்டங்களில் முழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு மகுடம் வைத்தாற் போல் அரசு தனது மறுப்பையும் வெளிவிவகார அமைச்சின் ஊடாக ஐ.நா சபைக்கும் அறியத்தந்திருந்தது. எனினும் தற்போது தனது நிலைப்பாட்டிலிருந்து வளைந்து பரிந்துரைகளை செயற்படுத்தும் ஆலோசனைகளை வழங்கும் ஐ.நாவின் மனிதவுரிமைச் சபையின் அங்கத்தவர்களின் உதவியைப் பெறும் பொருட்டு அவர்களை நாட்டுக்குள் அனுமதிப்பதாக தனது வெளிவிவகார அமைச்சினூடாக அறிவித்துள்ளது.

அடுத்து கூட்டமைப்புடன் உள்ளகப் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்கே சர்வதேச மத்தியஸ்தத்திற்கு அரசும் சம்மதமளித்திருக்கின்றது. பொதுவாகவே" எமது பிரச்சனையை நாமே பார்த்துக்கொள்கின்றோம்" எனும் கடும் போக்கில் இருந்த இலங்கை அரசு கூட்டமைப்புடனான உள்ளகப் பேச்சுவார்த்தைக்கே தென்னாபிரிக்க மத்தியஸ்தத்திற்குத் தலையாட்டியுள்ளது. எனினும் அதே திகதியில் இந்திய ஊடகமொன்றுக்குக் கருத்தை வெளியிட்ட சனாதிபதி" நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாகவே இனப்பிரச்சனைக்கான பொருத்தமான தீர்வு" முன்வைக்கப்படும் எனும் கருத்தை வெளியிட்டிருந்தார். இக் கருத்து பேரினவாதிகளைத் திருப்திப் படுத்தக்கூடியதாக இருக்க வேண்டும் எனும் நோக்கத்திலும் சிலவேளைகளில் வெளியிடப்பட்டிருக்கலாம். ஏனெனில் பேரினவாதிகள் தென்னாபிரிக்க மத்தியஸ்தத்திற் அளித்த சம்மதத்தால் அசூசை அடைந்திருப்பின் "அம் மத்தியஸ்த்தால் ஆகப் போவது எதுவுமில்லை" எனும் விடயத்தை வெளிக் கொணரவே இக் கூற்று வெளிப்படுத்தப் பட்டிருக்கலாம் என்பதும் உணரத்தக்கதே.

எனினும் இங்கு நோக்கப்பட வேண்டிய முக்கிய தொடர்பு யாதெனில் நவநீதம்பிள்ளை தென்னாபிரிக்காவைச் சேர்ந்தவர் என்பதுடன் மத்தியஸ்த்தத்திலும் தென்னாபிரிக்கக் குழு ஈடுபடப்போவதானது ஆலோசனைக்கென வரும் ஐ.நா குழுவால் செய்ய முடியாதவற்றைச் செய்ய மத்தியஸ்தக் குழுவை நவநீதம்பிள்ளை பாவிக்க முயற்சிப்பாரா? என்பதே. அவ்வாறிருக்கும் பட்சத்தில் இவற்றிற்குப் பின்புலமாக வலுவான வெளிச்சக்தியொன்று செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பது புலனாகின்றது.

### வாக்களிக்கத் தகுதி...

இதே வேளை 19 நிலையங்கள் மூலம் வாக்குகளை எண்ணுவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த தேர்தல் மூலம் கிழக்கு மாகாண சபைக்கென திருக்கோணமலை மாவட்டத்திலிருந்து 10 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட உள்ளனர்.

### வீர நரேந்திரரின் 150 ஆவது ஆண்டு விழாவுக்கான முத்தாய்ப்பு

வீர நரேந்திரர் விவேகானந்தரின் 150 ஆவது ஆண்டு விழாவை இம்முறை சிறப்பாகக் கொண்டாட இலங்கை இந்து ஸ்வயம் சேவா சங்கம் முன்வந்திருக்கின்றது. இதற்கான கலந்தரையாடல் கூட்டம் கடந்த 2012.08.12 ஆந் திகதி திருமலை சேனையூர் மத்திய கல்லூரி ஒன்றுகூடல் மண்டபத்தில் கல்லூரி முதல்வர் திரு.இரா.இரத்தினசிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

மூதூர் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி முகாமை) திரு.லோகராஜா, இந்து ஸ்வயம் சேவா சங்கத்தின் கிழக்கு மாகாண இணைப்பாளர் திரு.கலைச்செல்வன்ஜி, திருக்கொணமலை மாவட்ட இணைப்பாளர் திருமதி.உமா ரதீஸ்வரன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

கலந்துரையாடலில், மூதூர், ஈச்சிலம்பற்று பிரதேசங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் இந்துமத பெரியோர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் மற்று கொட்டியாபுரப்பற்று இந்துசமய அபிவிருத்தி ஒன்றியத்தின் செயலர் இளஞ்சைவப்புலவர் திரு.அ.குகராஜா ஆகியோர் கலந்துகொண்டு 5 இடங்களில் எதிர்வரும் செப்ரம்பர் மாத முற்பகுதிக்குள் இவ்விழாவை எழுச்சிபூர்வமாக நடாத்துவதெனத் தீர்மானித்துள்ளனர்.

இந்துமதத்துக்கு எதிராக மூதூர் கிழக்கில் வலுப்பெற்றுவரும் பிரசாரங்கள், மதமாற்றங்களுக்கு மத்தியில் வீர விவேகானந்தரின் 150 ஆவது ஆண்டு விழாவை மூதூரில் கொண்டாடுவது இந்து மதத்தக்குப் புத்துயிரளிப்பதாயமைகிறது.

### மூதூரில் விழிப்புணர்வு வீதி நாடகம்



கடந்த அசாதாரண சூழ்நிலைக் காலங்களில் மூதூரின் பல கிராமங்களில் பிரதேச சபையின் சேவைகளை மக்கள் பெற்றுக்கொள்வதில் பாரிய சிக்கல்களை எதிர்நோக்கிவந்தனர். பிரதேச சபை பற்றிய பூரண அறிமுகங்கள் கூட மக்களைச் சென்றடையவில்லை. இதனால் மூதூரின் பெரும்பாலான கிராமங்களில் மக்கள் தமது அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொள்வதில் பாரிய சிரமங்களை எதிர்கொண்டனர்.

யுத்த நிறைவின் பின்னர் மூதூர் பிரதேச சபையின் சேவைகள் கிராமங்கள் நோக்கி விஸ்தரிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது. இச் செயற்பாட்டின் ஒரு அங்கமாக மூதூர் பிரதேச சபையின் அனுசரணையில், விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தினரால் பிரதேச சபையின் சேவைகள் தொடர்பில் விளக்கமளிக்கும் வீதிநாடகம் மூதூரின் இனங்காணப்பட்ட 9 கிராமங்களில் நடந்தேறியது.

கடந்த 2012.08.13 தொடக்கம் 15 ஆந் திகதிவரையான 3 நாட்களிலும் மேன்கமம், கங்குவேலி, பள்ளிக்குடியிருப்பு, பாட்டாளிபுரம், நல்லூர், கடற்கரைச்சேனை, சேனையூர், கட்டைப்பறிச்சான் வடக்கு, கட்டைப்பறிச்சான் தெற்கு ஆகிய 9 கிராம சேவகர் பிரிவுகளில் இவ்வீதி நாடகம் காண்பிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் திருக்கோணமலை வித்தியாலயம் வீதியில் 58ம் இலக்கத்திலுள்ள எஸ். எஸ். டிஜிட்டல்ஸ் இல் 19. 08. 2012ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.